DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 128/2022 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 4 |
| Name | செல்வம் |
| Father / Husband Name | பாண்டி |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 11th July 2023.

---

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை கீழப்பூங்குடி கிராமத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் டாஸ்மாக் மேற்பார்வையாளராக வேலை செய்து வருகின்றேன்.என் உறவினரான பூவலிங்கம் அவரது மனைவி வினோதினி அவர்களுக்கு இரண்டு மகன்களுடன் ஈசனூரில் வசித்து வந்தனர். பூவலிங்கம் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் வேலை செய்து வந்ததால் அவரது மனைவியும், குழந்தைகளும் ஈசனூரில் இருந்து வந்தனர். விபத்தில் இறந்த வினோதினி இடையமேலூர் ஊராட்சியில் பணித்தள பணியாளராக பணிபுரிந்து வந்தார்.

2) இறந்த வினோதினியின் 2வது மகன் லிங்கேஸ்வரன் நெற்புகப்பட்டி கிராமத்திற்கு சென்றிருந்தவனை அழைத்து வருவதற்காக கடந்த

03.11.2021ம் தேதி வினோதினி தனது மூத்த மகன் கோகுல்ராஜ் என்பவருடன் Honda Activa இருசக்கர வாகனத்தில் சென்று நெற்புகப்பட்டி கிராமத்திற்கு சென்று அங்கிருந்த இளைய மகன் லிங்கேஸ்வரனை அழைத்துக்கொண்டு அதே இருசக்கர வாகனத்தில் வினோதினி, இரண்டு மகன்களுடன் ஈசனூர் நோக்கி வந்து கொண்டிருந்த போது, பூவலிங்கத்தின் உடன் பிறந்த சுப்புராஜ் என்பவர் TVS XL இருசக்கர வாகனத்தில் அவர்களுக்கு அருகிலேயே வந்து கொண்டிருந்த போது ஒக்கூர் அண்ணாநகரில் வந்து கொண்டிருந்த போது மாலை 06.00 மணியளவில் TN 63 N 1265 என்ற எண்ணுள்ள அரசு பேருந்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த பேருந்து வினோதினி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பின்னால் வந்து அஜாக்கிரதையாக மோதியதில் லிங்கேஸ்வரனும், வினோதினியும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர்.

3) கோகுல்ராஜ்க்கு உடலில் பலத்த அடிபட்டு அவர் தந்தை தான் இயற்கை உபாதைகளுக்குக் கூட தூக்கிச் செல்லும் நிலையில் இன்றளவும் மருத்துவம் பார்த்து வருகிறார்கள். மேற்படி விபத்து நடந்த விவரம் சுப்பரமணியன் என்பவர் மூலம் எனக்கு விபத்து நடந்த 1/2 மணிநேரத்தில் தெரியவந்த உடன் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். அதன் பிறகு சம்பவத்தில் இறந்த நபர்களை பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

சம்பவம் எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன வினோதினி, லிங்கேஸ்வரன், காயம்பட்ட கோகுல்ராஜ் ஆகியோர்கள் என் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவ இடம் தெரியுமா என்றால் ஒக்கூர் அண்ணா நகர் பஸ் ஸ்டாப் அருகில். சம்பவ இடத்தின் வடக்கு பக்கத்தில் 30 அடி தள்ளி பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் சரிதான்.

(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 11.07.2023
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.